# அகநானூற்றில் புகழ் சார்ந்த பெருமிதம்

கு.பொன்னழகு
முனைவர் பட்ட ஆய்வாளர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை 21.

8

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியங்கள் பதிணென் மேற்கணக்கு கீழ்கணக்கு என்று பெரும் பிரிவுகளைக் கொண்ட நூலாகும். சங்க இலக்கிய எட்டுத்தொகையில் அகம், புறம், அகமும் புறமும் கலந்தவை என்று மூன்று நிலையில் அமைந்துள்ளது. இவற்றில் ஐந்தாவதாக தொகுக்கப்பட்ட நூல் அகநானூறு. அகநானுற்றில் அமைந்துள்ள திணைகள்கள் ஓர் ஒழுங்கு (1,3,5,7,பாலை 2,4,12,18,குறிஞ்சி 4,14,24, முல்லை 6,16,26,மருதம் 10, 20, 30,நெய்தல்) முறையில் தொகுக்கப்பட்ட ஒரே தொகை நூலாகும். அகநானூற்றில் தலைவனின் புகழ்ச்சிறப்பு, ஊரின் புகழ், மலைநாட்டின் சிறப்பு, உழவர்களின் புகழ், புலவரின் புகழ், ஆகியவை இக்கட்டுரையின் வழி ஆராயப்பட்டுள்ளது.

**முன்னுரை**

பழந்தமிழ் இலக்கியமான சங்க இலக்கியங்களை அகம், அகப்பாட்டு எனச் சிறப்பிக்கப்படுவது அகநானூறு. இது பண்டைய தமிழரின் வாழ்க்கை முறை, பழக்கவழக்கம், கல்வி, வீரம், புகழ், கொடை, முதலான பண்பாட்டுத்தரவுகளின் கருவுலமாக அமைந்துள்ளது. இதன் கண் அகநானூற்று பாடல்களின் வழி புகழ் சார்ந்தபெருமிதத்தைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது

**புகழ் பெருமிதம்**

புகழ் பட வாழ்வதற்கு கல்வி, ஆண்மை, கொடை ஆகியவை துணை செய்யும். ஆனால் வறியவருக்கு கொடுத்து புகழோடு வாழும் வாழ்வே சாலச் சிறந்தது என்று கருதப்படுகிறது. “இவ்வையகத்தில் ஒன்றி நிகழ்வன புகழும் நல்லறமுமேயாகும். மற்றவை வெறும் பொய் தோற்றங்களே! இவற்றை உணர்ந்தவர் தமக்கு இகழ்ச்சியும் பழியும் தரும் ஈனத் தொழிலை எக்காலத்திலும் செய்ய மாட்டார்கள்" (கா வெள்ளிமலை, தமிழ்க்கேணி, பக் 92) என்று புகழின் சிறப்பை எடுத்துரைக்கிறார். புகழோடு, வாழும் வாழ்வை மேற்கொள்ளும் போது புகழ் பெருமிதம் உண்டாகிறது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு** (குறள் 231)

என்று புகழைச் சிறப்பிக்கின்றார் வள்ளுவர். வறியவருக்கு ஈதல் வேண்டும் அதன் புகழ் உண்டாகும் படி வாழ்தல் வேண்டும் அப்புகழைத் தவிர நிலையாய் இருப்பது வேறு ஒன்றுமில்லை.

**புகழ் பொருள் விளக்கம்**

இசை எனும் சொல், புகழ் என்னும் பொருளில் வரும். “ஒருவன் தன் வாழ்நாளில் புகழுக்கு ஏதுவான செயல்களை செய்வதே இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் தருவதாகும். அவர்களுடைய புகழ் நில்லா

உலகில் என்றும் நிலைத்து நிற்கும்" (மு.சண்முகம்பிள்ளை,சங்கத்தமிழ் வாழ்வியல் பக்.28) என புகழினால் வரும் இன்பத்தை குறிப்பிடுகிறார்.

மக்கள் வாழும் வாழ்வின் பயனே புகழாகும். இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுவதன் மூலம் வரும் புகழே சிறந்த புகழாகும். "புகழ் என்பது மக்கள் உயிர்களுக்கு இம்மைப் பயனாகிற இவ்வுலகின் கண் நிகழ்ந்தது, என்றும் இருப்பது. இதனை உலகில் வாழும் மனிதர் ஒவ்வொருவரும் அடைதல் வேண்டும். இதனை அடையாதவர் இவ்வுலகில் வாழ்ந்து பயன் பெற்றதாக கருத முடியாது. புகழ் என்றாலும் இசை என்றாலும் ஒன்றே. இவ்வுலகில் மக்கள் உயிருக்கு வாழ்வின் பயனே புகழேயாகும்." தமிழ்நாட்டு கொடைஞர்கள் என்று நா.இராமையா பிள்ளை குறிப்பிடுகின்றார்.

**புகழின் உயர்நிலை**

இவ்வுலகில் இசைப்பட வாழாதவருக்கு உயர்நிலை உலகமாகிய வீட்டு உலகம் கிட்டும் என்றும் புலவர் முதலியோர் புகழும் படியான சிறப்புடையவருக்கு மேலாக இன்பம் கிட்டும் என்றும் கருதினர் புகழ் குறித்து பேசாத இலக்கியங்களே இல்லை எனலாம் அந்த வகையில் இலக்கியங்களில் புகழின் உயர்நிலை குறித்து பின்வருமாறு அறியலாம். புகழ்பட வாழ்பவருக்கு செல்வம் மேன்மேலும் பெருகும் அவருடைய பெயரும் புகழும் உலகமெங்கும் பரவி பலராலும் பாராட்டப்படும்.

**"இசை பட வாழ்வார் செல்வம் போலக்**

**காண்டொறும் பொலியுங் "** (ந.மு வேங்கடாசாமி,சா. வேங்கடாசலம் பிள்ளை (உ.ஆ) அகநானூறு களிற்றியானைநிரை பக் 204) என்ற பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. உலகெலாம் பறக்கும் பலரும் புகுவது நல்ல புகழ் ஆகும் என்பதை

**"உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்லிசை"** (ஞா. மாணிக்கவாசகன்(உ.ஆ),பதிற்றுப்பத்து பக் 34)என்ற பாடல் அடியால் உணரப்படுகிறது.

**"நெடியோன் அன்ன நல்இசை"** (பொ.வே.சோமசுந்தரனார் (உ.ஆ),குறுந்தொகை,பக் 451.) என்ற பாடல் அடி எடுத்தியம்புகின்றது.

**அகநானுற்றில் புகழ்**

ஒருவன் தன் வாழ்நாளில் புகழுக்குரியச் செய்திகளைச் செய்கின்ற போது புகழ்நிலை உயர்கின்றது. தெய்வம் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவும் போது ஏற்படுகின்ற புகழ் சிறப்பானதாகக் கருதப்படுகின்றது. அதன் அடிப்படையில் அகநானுற்றில் அமைந்திருக்கும் தலைவனின் புகழ்,தலைவனின் ஊர்ச்சிறப்பு, தேரின்புகழ், உழவர்களின் புகழ், கபிலரின் புகழ் பற்றிக் காண்போம்.

**தலைவனின் புகழ்**

பொதிகை மலைக்கு உரியவன். முருகனைப் போல நல்ல வெற்றிச் சிறப்பு மிக்கவன். மலர்ந்த மலர்களாகிய கண்களையும் ஒளி பொருந்திய வீரக்கழலினையும் உடையவன் குதிரைகளையும் மழவரைப் புறங்காட்டி ஒடச்செய்தவன் என்று தலைவனின் புகழ் மிகுந்து காணப்படுவதாகவும் உயர்ந்த செயல்களை கொண்டும் அமைகின்றன.

**"வண்டுபடத் தைந்த கண்ணிஒண் கழல்**

**உறவு குதிரை மலவர் ஒட்டிய**

**முருகன் நற்போர் நெடுவேள் ஆவி**
**அறுகோட் யானைப் பொதினி ஆங்கன்**
**சிறு காரோடன் பயினொடு சேர்த்திய**
**கல் போல் பிரியலாம் என்ற சொல்தாம்**
**மறந்தனர் கொல்லோ"** எனும் பாடல் உணர்த்துகிறது.

**தலைவனின் ஊர்**

பலாமரத்தில் பழுத்த பழங்களை வாங்குவதற்கு குறவர்களின் குடிசைகளை நாடினர் வேங்கை பூவானது குடிசை மறையும் அளவு அதன் மீது பரவி கிடந்தது வேங்கை பூவின் கரும்புள்ளிகளைப் பார்த்து யானைகள் புலி என்று அஞ்சி மேகங்கள் படிந்திருக்க மலை பக்கத்தில் மூங்கில் ஒடிந்து விழுமாறு ஒடிச்சென்றது அத்தகைய வளம் பொருந்திய மலைநாடனே எனத் தலைவனின் ஊர்சிறப்பை புகழ்ந்து கூறுகிறது.

**"கிளி விளி பயிற்றும் வெளில் ஆடு பெருஞ் சினை**
**விழுக்கோட் பலவின் பழுப் பயம் கொண்மார்**
**...........புலிசெத்து வெரீஇய புகர்முக வேழம்**
**மழை படு சிலம்பில் கழைபட பெயரும்**
**நல்வரை நாட நீ வரின்**
**மெல்லியல் ஓரும் தான் வாழலளே"** (அகம்12)

**தலைவனுடைய தேரின் புகழ்**

குதிரைகளின் வேகமானது விரைந்து செல்லக்கூடியதும் கற்களின் மேல் மோதி ஒலியை எழுப்பக்கூடிய தேர் உருளையின் ஒளியானது மழைக்காலங்களில் இடிமுழக்கம் போல ஒலிக்கும் நல்ல ஊரினை உடைய தலைவனின் அலங்கரிக்கப்பெற்ற நெடிய தேரினை நான் கண்டேன் எனப் புகழ்ந்து கூறுகிறாள்.

**"விடுவிசைக் குதிரை விலங்குபரி முடுக**
**கல்பொருது இரங்கும் பல்ஆர் நேமிக்**
**கார்மழை முழங்கு இசை கடுக்கும்**
**முனை நல் ஊரன் புனைநெடுந் தேரே"** (அகம்14)

எனும் பாடல் மூலம் தேரின் புகழை அறிய முடிகிறது.

**உழவர்களின் புகழ்**

உழவுத்தொழில் இல்லை யென்றால் உலகத்தில் மக்கள் உயிர் வாழ முடியாது உலகின் முதுகெலும்பாக திகழ்வது விவசாயம் உழவுத் தொழில் மேற்கொள்பவர்கள் வயலுக்குச் சென்று விதைக்கப்பட்ட நெல்லை அறுவடை செய்து நெற்கதிர்களை தூற்றி எடுத்தனர். கொள்ளும் பயிறும் பாலுடன் கலந்து ஆக்கிய கஞ்சியை சேர்த்து உண்டனர் நெற் கூட்டங்களைச் சுற்றி தம் எருதுகளோடு தங்கி இருந்தனர் இவ்வாறு உழவர்களின் சிறப்பையும் புகழையும் இப்பாடல் உணர்த்துகிறது.

**"மறந்துஅவண் அமையார் ஆயினும்கறங்கு இசைக்**
**கங்குல் ஒதைக் கலிமகிழ் உழவர்**
**பொங்கழி முகந்த தாஇல் நுண்துகள்**
**மங்குல் வானின் மாதிரம் மறைப்ப**
**வைகுபுலர் விடியல் வைபெயர்த்து ஆட்டி"** (அகம்37)

**மலைநாட்டின் தலைவன்**

கார்கலத்தில் இனிய இசைமுழக்கம் போல இடி இடித்துப் பெருமழை பெய்தது. உயிரிகள் எல்லாம் உறங்கும் இரவில் குறத்தியின் தந்தை காட்டில் வேட்டையாடி உறங்குவதற்கு இடம் இல்லாது இருந்த போது உன் இல்லத்தில் புலித்தோலை விரித்துத் தங்குவதற்கு இடம் கொடுத்த மலைகள் பொருந்திய நாட்டின் சிறப்பினை உடைய தலைவனே! என்று புகழ்ந்து கூறப்படுகிறது.

**"இன்இசை உருமொடு கனைதுளி தலைஇ**
**மன்உயிர் மடிந்த பானாட் கங்குல்**
**காடுதேர் வேட்டத விளிவுஇடம் பெறாஅது**
**வரிஅதள் படுத்த சேர்க்கை தெரிஇழைத்த**
**தேன்நாறு கதுப்பின் கொடிச்சிரியர் தந்தை**
**கூதிர்இல் செறியும் குன்ற நாட"** (அகம்.58)

என்னும் பாடலில் அறியமுடிகிறது.

**சான்றோர்களின் புகழ்**

சான்றோர்கள் கல்வியிலும் அறிவிலும் சிறந்தவர்களாக விளங்கும் வகையில் பகைவரும் விரும்பி பிறரால் பழிக்கப்படாத குற்றம் தீர்த்த புதல்வரைப் பெற்ற தலைமைத் தன்மையுடையோர் இவ்வுலகத்தில் புகழோடும் வாழ்ந்து மறுமை உலக வாழ்வையும் எய்துவர் சான்றோர் பலர் கூறிய பழமொழிகள் உண்மையானதாகவும் அமைகின்றன என்பதையும் இப்பாடல் உணர்த்துகிறது.

"**இம்மை உலகத்து இசையொடும் விளங்கி**
**மறுமை உலகமும் மறுஇன்று எய்துப**
**செறுநரும் விழையசெயி தீர்காட்சி**
**சிறுவார்ப் பயந்த செம்மலோர் எனப்**
**பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்**
**வாயொடு ஆகுதல் வாய்த்தனம்தோழி"** (அகம் 66)என்னும் பாடல் உணர்த்துகிறது

**கபிலரின் புகழ்**

புகழினையும் வாய்மை தவறாது மொழியினையும் உடையவர் கபிலர் சேர, சோழ, பாண்டியர் மூவரும் பாரியின் பறம்பு மலையை முற்றுகையிட்டபோது அரண்மனையில் உள்ளிருப்போர் உணவின்றி வருந்தாமல் இருப்பதற்கு கிளிகளை வளர்த்து பழக்கி வெளியில் இருந்து முற்றியே நெற்கதிர்களைக் கொண்டு வரச்செய்து பசியைப் போக்கினார் இப்பாடலில் இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவும் சிறப்பினையும் கபிலரின் புகழையும் அறிய முடிகிறது.

**"எம்விட்டு அகன்ற சிலநாள் சிறிதும்**
**உள்ளயும் அறிதிரே ஒங்குமலைநாட**
**உலகுடன் திரிதரும் பலர்புகழ் நல்இசை**
**வாய்மொழிக் கபிலன் சூழ சேய்நின்று**
**செழுஞ்செய்ந் நெல்லின் விளைகதிர் கொண்டு**
**தடந்தாள் ஆம்பல் மலரோடு கூட்டி**
**யாண்டுபல கழிய வேண்டுவாயிற் பிழையாது**

**ஆள் இடுஉக் கடந்து வாள் அமர் உழக்கி**
**ஏந்துகோட்டு யானை வேந்தர் ஒட்டிய**
**கடும் பரிப் புரவிக் கைவாண் பாரி"**(அகம்78)

புறநானூறுப் பாடலும் கபிலரின் சிறப்பைக் கூறுகிறது.

**மீளி முன்பின் ஆளிபோல** (புறம் 207)

இதே போன்று ஐங்குறுநூற்றுப் பாடலிலும்

**நின்னயந்து உறைவி கடுஞ்சூற் சிறுவன்** (ஐங் 309)

**முடிவுரை**

சமூகத்தில் மனிதன் உயர்நிலையை அடையும் போது புகழ்நிலைஉண்டாகுகின்றன.வறியவருக்கு கொடுத்து புகழோடு வாழும் வாழ்வு சிறப்புடையதாகும் இசை என்பதற்குப் புகழ் என்ற பொருளும் அமைகிறது. மக்கள் வாழ்வு பயனுடையதாக இருக்க வேண்டுமென்றால் உயர்நிலை அடையவேண்டும் உயர்நிலைக்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்வது புகழாகும். புகழின் பிறப்புக்கு அடிப்படைக் காரணமாகத் திகழ்வது கல்வி,கொடை முதலியனவாகும்.

**துணை நூல்கள்**

1. வெள்ளிமைல.,க. தமிழ்க்கேணி ப.92 சிங்காரவேலர்தெரு தியாகராயர் நகர்,சென்னை.600 017

2. சண்முகம்பிள்ளை,மு. சங்கத்தமிழ் வாழ்வியல்ப.298 உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையதொழில் நுட்பப் பயிலக வளாகம், தரமணி சென்னை.6000 0113

3. இராமையாப்பிள்ளை,நா. தமிழ்நாட்டுக் கொடைஞர்கள் ப.33 வெளியிடுவோர் எம். வெற்றியரசி சோசப் குடியிருப்பு கோடம்பாக்கம் சென்னை 6000 008.

4. ந.மு வேங்கடசாமி, ரா. வேங்கடாசலம் பிள்ளை(உ.ஆ)அகநானூறு களிற்றுயானைநிரை ப.204 திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் சென்னை 6000 018

5. ஞா.மாணிக்கவாசகன் (உ.ஆ), பதிற்றுப்பத்து ப.34 உமா பதிப்பகம் 18/171 பாவலக்காரன்தெரு,மண்ணடி ஜார்ஜ் டிவுன், சென்னை 600 001.

6. பொ.வே. சேமசுந்தரனார்(உ.ஆ) குறுந்தொகை ப. 451 சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் சென்னை.

7. செயபால் இரா. (உ.ஆ) அகநானூறு மூலமும் உரையும் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி)லிட் 41-பி சிட்கே இண்டஸ்டிரியல் எஸ்டேட் அம்பத்தூர் சென்னை 600 108